அ.வ.எண். 37/2024

நாள் – 19.02.2025

வாதி – மாரிச்செல்வி – க/பெ. பழனி

**கட்டளை 10 ன் கீழ் பதிவு செய்யும் வாதியின் விசாரணை வாக்குமூலம்**

1. பிராது 1ம் தபசில் சொத்து என் கணவருக்கு அவரது தாத்தா உயில் மூலம் கொடுத்த சொத்து ஆகும்.

2. உயில் ஆவண 3ம் இலக்க சொத்து தான் பிராது 1ம் தபசில் சொத்து. அதை அளந்து பார்க்கும் போது பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் 1,2 பரிகாரத்தை பொறுத்து நான் எந்த நிவாரணமும் கோரவில்லை. ஒருவேளை ஆக்கிரமிப்பு இருந்தால் நான் மேற்கொண்டு வழக்கு நடத்துவேன்.

3. உயில் ஆவணப்படி பிராது 3ம் தபசில் சொத்தானது வழிநடை பாதை அதில் எனக்கும், பிரதிவாதிக்கும் பாதி பாகம் உள்ளது. அந்த வழி நடை பாதையில் பிரதிவாதி எனக்கு உரிமை உள்ளது என தெரிவித்தால் பிராது 3 மற்றும் 4–ம் நிவாரணமும் எனக்கு கிடைக்கப்பெறுவதால் அதைப் பொறுத்து நான் எந்த வழக்கும் நடத்த விரும்பவில்லை. உயில் ஆவணப்படி பொது நடைபாதை இல்லை என்றால் விட்டுக்கொடுக்க தயாராக உள்ளேன். உயில் ஆவணத்தில் கண்ட சொத்து தான் பிராது 1 முதல் 3 தபசில் சொத்துக்கள். பிராது சொத்துக்களை அளந்தால் எனக்கும், பிரதிவாதிக்கும் வழக்கு சம்மந்தமாக சமரசம் ஏற்பட வாய்ப்புள்ளது.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி.